SRI PARTHASARATHY SWAMI SABHA
Bharat Nritya Utsav
Email : parthasabha@gmail.com
http://sriparthasarathyswamisabha.com/

• Volume: 6 • Issue: 9
Feb.09, 2020
• For Private Circulation Only

# SANGEETH SARATHY




## புன்னகையில் கவர்ந்த ஆடல்

LAJANTHA KUNASEGARAM

பத்மஸ்ரீ சோபனா அவர்களின் க்ருஷ்ணா பரதநாட்டியப் பள்ளி மாணவி தேவப்ரயகாவின் பரதநாட்டிய அவைக்காற்றுகை நிகழ்வு இடம்பெற்றது.

இதில் ராமனை பலவாறாக போற்றி அவன் அருள் வேண்டி தாளமாலிகா, இராகமாலிகாவில் அமைந்த “ஜய ஜானகி ரமண...” என்று தொடங்கும் தோடயமங்கலப் பாடலுடன் நிகழ்வு ஆரம்பமாகி தொடர்ந்து “சுவாமியை அழைத்தோடி வா...” என்ற இராகமாலிக, ஆதிதாள வர்ணம் இடம்பெற்றது. வர்ணத்தின் சஞ்சாரிகளில் தன் தலைவனை அழைத்து வருமாறு தோழியிடம் கெஞ்சியும், கொஞ்சியும் அபிநயித்தது சிறப்பாக அமைந்தது.




வர்ணத்தினைத் தொடர்ந்து ஸ்ரீ முரளி பார்த்தசாரதி அவர்களின் இனிமையான குரலிசையில் “அதுவும் சொல்லுவாள்...” என்ற சௌராஷ்ர இராக பதமும் , “தீராத விளையாட்டுப்பிள்ளை.....” என கண்ணனின் கோபிகைகளுடனான லீலைகளை அழகாகக் கூறும் கண்டசாபில் அமைந்த பதமுமாக தொடர்ந்து இரண்டு பதங்கள் இடம்பெற்றன. கண்ணன் பாட்டில், கண்ணனின் குறும்புகளை கூறும் பெண்களின் கோபமும், கண்ணனின் குறும்புத்தனமும் என தேவப்ரயகாவின் கதாப்பாத்திரங்களிற்கேற்ற அபிநயமுறை அக் காட்சிகளை கண்முன் நிறுத்தின. தொடர்ந்து வந்த திலங்க் இராக ஆதி தாள தில்லானாவின் விறுவிறுப்புடன் நிகழ்வு நிறைவடைந்தது. நடனக்கலைஞர் இறுதிவரை தனது சிரித்தமுகத்தினாலேயே அடவுகளுக்கு அழகுசேர்த்திருந்தார்.

குரு சோபனா அவர்களின் மூத்த மாணவிகளில் ஒருவரான ஸ்ரீமதி. ஸ்ரீவித்யா ஷைலேஸ் அவர்களின் நேர்த்தியான நட்டுவாங்கக் கையாள்கையும், ஸ்ரீ முரளி பார்த்தசாரதி அவர்களின் இனிமையான வாய்ப்பாட்டிசையும், ஸ்ரீ குரு பரத்வாஜ் அவர்களின் மிருதங்க வாசிப்பும், சுஜித் அவர்களின் புல்லாங்குழலிசையும் நிகழ்வை மேலும் சிறப்பூட்டின.




## SANGEETH SARATHY ONLINE

All editions of Sangeeth Sarathy published this season is available at www.parthasarathyswamisabha.com



# SNAPSHOTS



Bharatanatyam duet by N. V. Harshida and V. Varshita, disciples of Guru Maalini Balaji on February 3, 2020




February 2, was a colourful evening with young dancers owning the stage. Back to back Bharatanatyam recitals by Vyomini and Akshara, disciples of Smt Srekala Bharat brightened up the ambience with their performances. The audience showed a fabulous support by turning up in large numbers and encouraging the budding artistes. It is the enthusiasm of these youngsters that motivate us to continue the festivals year after year. Youngsters like this prove time and again how Indian art and culture is timeless and at the same time dynamic!






Bharatanatyam by Preetha , disciple of Guru Lalitha Ganapathy on February 2. She performed a Vinayagar Kavuthuvam followed by a varnam in ragam Panduvarali and Talam Adi composed by Sri Madurai N Krishnan. She continued with a Madeva Siva Shambo in Revathi. After the popular thirupugazh ' Eru Mayil', she concluded the recital with a thillana in Brindavana Saranga, yet again a composition of Madurai N. Krishnan

# மார்க்கத்தில் ஓர் கதையமைப்பு

LAJANTHA KUNASEGARAM



பார்த்தசாரதி சுவாமி சபாவின் வருடாந்த பரதநாட்டிய உற்சவத்தில் கலைமாமணி டாக்டர் லக்ஷ்மி இராமஸ்வாமி அவர்களின் ஸ்ரீமுத்ராலயா நடனப்பள்ளியின் மூத்தமாணவியான ஜக்யசேனி சாற்ரர்ஜீ அவர்களின் பரதநாட்டிய அவைக்காற்றுகை நிகழ்வு இடம்பெற்றது.

அன்னமாச்சாரியாரின் ஸ்ரீஹரியை போற்றுவதாக அமையும் "அதிவோ அல்லதிவோ…." என்ற தெலுங்குப் பாடலுடன் நிகழ்வு ஆரம்பமாகி, தொடர்ந்து காமதேவனான மன்மதன் தனது மலர் பாணங்களால் காதலர்களிடம் ஏற்படுத்தும் மாற்றங்களை விபரிப்பதாக அவனது புகழ்சி கூறும் வகையில் "மயிலணைய ரதியுடனே…" என டாக்டர். எஸ். ரகுராமன் அவர்களின் வரிகளில், அவரது மனைவி டாக்டர். வானதி ரகுராமன் அவர்களின் இசையமைப்பில் அமைந்த சப்தம் புதுமையான படைப்பாக இருந்தது.

தொடர்ந்து "வேலனிடம் போய் சொல்லடி…." என முருகனிடம் காதல் கொண்ட பெண்ணின் மனநிலைகளை விபரிப்பதாக அமையும் கு. மா. பாலசுப்ரமணியம் அவர்களின் வரிகளில் அமைந்த வர்ணத்தில் குரு சித்ரா விஸ்வேஸ்வரன் அவர்களின் திறமையான ஜதி அமைப்புக்களும், பொருத்தமான சஞ்சாரிகளும் நடனக் கலைஞரின் ஆடலில் வெற்றிகண்டன.

ஒவ்வொரு உருப்படிகளுக்குமான அறிமுகமும், ஆடலுக்கு இடையிடையில் நடனமாடிய நடனக் கலைஞரினாலேயே கூறப்பட்டதானது சிறந்த முயற்சி. உருப்படிகளின் இடையில் ஓய்வெடுக்காத இச் செயற்பாடானது, அவரது எளிதில் களைப்படையாத் தன்மையினையும் உறுதிசெய்வதாக அமைந்தது. அவ் ஒவ்வொரு உருப்படிகளுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் ஒரு கருத்தின் தொகுப்பாக "You are the one – in many names and many forms" என அமைத்த அவரது கற்பனையானது சபையோரை மேலும் ஆர்வமூட்டியது.

தொடர்ந்து கிருஷ்ணனை அடைவதற்காக காத்திருந்த மீராவின் மன நிலையைக் கூறுவதாக அமைந்த "மீராபஜன்" தர்பாரிகானடா இராகப் பாடலிசையுடன், அபிநயத்தில் ஸ்தாயிபாவத்தின் பல சாயல்களை காண்பிக்கும் குருவின் நடன நெறியாள்கையும் இணைந்து பலரையும் கவர்ந்தது. தொடர்ந்து ஹம்சானந்தி தில்லானாவுடன் திரிபுரசுந்தரியை வணங்கி நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

ஒலிப்பதிவினை பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட இவ் ஆற்றுகையில் குரு லக்ஷ்மி இராமசுவாமி அவர்களின், நீண்ட ஜதிகளிலும் சுமூகமாக கையாளப்பட்ட நட்டுவாங்கமும், வீரராகவனின் குரலிசையும், எம்பார் கண்ணன் அவர்களது வயலினிசையும், குரு பரத்வாஜ், வேதகிருஷ்ணன் அவர்களது நேர்த்தியான மிருதங்க கையாள்கையும், மீராபஜனைக்கு காட்சிவடிவம் கொடுத்த அனந்தக்ருஷ்ணன் அவர்களின் வயலினிசையும், ஸ்ருதிசாகர் அவர்களின் புல்லாங்குழலிசை என அனைத்தையும் ஒருங்கிணைத்த ராஜ்குமார் பாரதி அவர்களின் இசையமைப்பானது ரசிகர்களின் மனதில் பெரும் இடம்பிடித்து முழு நிகழ்விற்கும் தூணாய் அமைந்தது.

இந் நிகழ்வானது தமிழ், தெலுங்கு, ஹிந்தி என வெவ்வேறு மொழிப்படைப்புக்களையும் ஒன்றிணைத்து வழங்கியதுடன், மன்மத சப்தம், மீராபஜன் என்ற புதுப் படைப்புக்கள் மாத்திரமின்றி அன்னமாச்சாரியார் போன்ற பழம்பெரும் கலைஞர்களின் படைப்புக்களையும் உள்ளடக்கி முழுமையளித்தமை சிறப்பு. வர்ணம், தில்லானாவின் வேறுபட்ட தாள ஜதிகளில் அங்கசுத்தத்தினையும், சீரான அரைமண்டியினையும் பேணி தனது கடுமையான தொடர் பயிற்சியினை, உறுதிப்படுத்தியிருந்தார்.








*Photos by Aravind*

# Krishna – A thematic solo

LALITHA NARASIMHAN

M. Harisri, disciple of Smt. Padma S. Ragavan, presented a thematic solo - Krishna. Thematic presentations have become a trend and sometimes it works wonders to create an interest and curiosity in the minds of the rasikas. Sometimes it serves as a disadvantage because one is seated with an expectation in the mind.

Harisri, with her beautiful smile tried her best to justify all the songs that were based on Lord Krishna.

She began with a Virutham as a salutation to Lord Gopala and continued with an Alarippu in chathusram, and made it an energetic beginning. Jathiswaram has become a neglected piece in a recital. But Harisri had one in her recital, set to charukesiragam and aditalam. A little bit of more attention towards nritta could have made it better.



Harisri then moved on to the main number Varnam in bhairavi ragam and aditalam composed by Sri Periyasami Thooran. It was a neat choreography with episodes from Krishna leela depicting Krishna's naughtiness with gopikas and the story of Kuchela. It seemed that her forte is her energy than her abhinaya, which eventually shall grow in her with time.

Govardhana giridhara, a Keerthanam in hindholam ragam and adi talam composed by Sri Narayana Theerthar was the next number performed where the devotees requests Lord Krishna to save them from their difficulties.

Harisri concluded her recital with a Thillana in ragam valji and talam Adi composed by Madurai Sri. M. Krishnan in praise of Lord Venkatesa of Thirupathi, which was followed by the Mangalam with versus from Sri Venkatesa Mangalam. Harisri had an excellent orchestra support that comprised Smt. Padma S. Ragavanon the nattuvangam, Nandini Sharma (vocal), Dhananjayan(mridhangam) and Dr. S. Vijayaragavan (violin).





Bharatanatyam by Students of Kaladiksha, disciples of Guru Meenaskshi Chitharanjan saw a full house audience cheering the enthusiastic dancers on February 5, 2020





Bharatanatyam by Vinishya Dharmendra, disciple of Guru Pooja Shanthosh on February 6, 2020



# A margam, well conceived

AMRUTHA SRIRAM



Beginning with a chatushra Alarippu, Rajalakshmi Baskaran, a disciple of Prof. Sikkil Vasanthakumari, continued with the famous Natakurinji Varnam 'Swami Naan Undhan Adimai'. She delivered stories of Lord Shiva interspersed with slow paced jathis with confidence.

Maharaja Swati Thirunaal's Bhajan 'Chaliye Kunjan' was a unique pick. A young Gopi invites Krishna to spend time with her in the garden and listen to the eternal songs of love sung by the cuckoo bird. The dancer emoted this quite well, almost intriguing the audience and one could see reflections of a mischievous Krishna trying to hold the hands of the love-struck Gopi.

The padam 'Netrandhi nerathile' in Ragam Huseni and Rupaka Talam would have been a hit if there had been an unwavering sthayi bhava and distinction between the characters involved in the premise. This switch of characters is a result of practice, internalization and many years of experience. And the dancer definitely has the potential to show greater strength with time.

Rajalakshmi was well supported by a strong team of orchestra. While Smt. Bhavani Guru bharadwaj played the Nattuvangam Sri. Gurubharadwaj accompanied her adeptly in the Mridangam. Smt. Roshini Ganesh's able singing enhanced the beauty of every song. Kum. Subhashree Shankar played the violin. The recital was concluded with the Hamsadwani Thillana. A little more attention in stances and execution of nritta would catapult Rajalakshmi's future performances.




'Velum Venkuzhalum' Bharatanatyam Group Presentation by Guru Ramya Vikram, Smrithi Vikram and Anagha. K on February 4, 2020




Bharatanatyam by S.S. Vishwa Shree, disciple of Guru Sheela Unnikrishnan on February 7, 2020

Bharatanatyam by Varsha Chandrasekar, disciple of Guru Malathi Thothadri, on February 8, 2020



Bharatanatyam by Vinaya Dhanasekar, V. Krishna Laasya, Hitanshi Midha, disciples of Guru Malathi Thothadri on February 8, 2020






# அரியவகைப் படைப்புக்கள் புத்துயிர் பெற்றன.

LAJANTHA KUNASEGARAM

டாக்டர். திருமதி.ஷீலா உன்னிகிருஷ்ணன் அவர்களது ஸ்ரீதேவி நிருத்தியாலயா நாட்டியப்பள்ளி மாணவி குமாரி. ராஜதர்ஷினி சரவணன் அவர்களின் பரதநாட்டிய அவைக்காற்றுகை நிகழ்வு இடம்பெற்றது.

குழு நடனங்களில் மாணவர்களுக்கிடையான சீருடைத்தன்மையைப் பேணுவதன் மூலமாக தன்னை வெளிக்காட்டிக் கொண்ட இந் நடனப்பள்ளியின் மூத்த மாணவிகளில் ஒருவரான இவரின் நிகழ்வில் சவாலானதும், அரிதானதுமான படைப்புக்களை நாட்டியத்தில் கையாண்டிருந்தது குருவின் சிறந்த முயற்சி. அந்தவகையில் சதுஸ்ரகதியும் திஸ்ர கதியும் இணைந்த த்விகதியில், மிருதங்க வித்துவான் திரு.குருபரதவாஜ் அவர்களால் அமைக்கப்பட்ட ஆதிதாள அலாரிப்புடன் நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ந்து மராட்டியக் கவிஞர் திருமதி.சாந்தாசக்தி அவர்கள், சாரதாம்பிகையை போற்றி எழுதிய கீர்த்தனத்தை, வித்துவான் திரு. ஜி.ஸ்ரீகாந்த் அவர்கள் கலாவதி இராக, மிஸ்ரசாபு தாளத்தில் கௌத்துவமாக இசையமைத்துப் பாட, நடனக் கலைஞரும் தன் நாட்டியத்தில் சரஸ்வதியைப் போற்றி வழிபட்டார். அவைக்காற்றுகையின் நடுநாயக நடனமாக ஸ்ரீ ராக, ஆதி தாளத்தில் ராம பக்தியில் அமைந்த தியாகராஜரின் பஞ்சரத்னக் கிருதியானது, இசையின் பாவராக தாளத்தினையும், நடனத்தின் நிருத்த நிருத்திய நாட்டியத்தினையும் இணைத்து இன்பம் அளித்தது.

இதன் பின், ஆண்டவனானாலும் அடிமையானாலும் அசதியில் வரும் தூக்கம் ஒன்றே! பிராமணனானாலும் பாமரனானாலும், நடக்கும் பூமி ஒன்றே! இவை போல நல்லவர்க்கும் தீயவர்க்கும் மோக்ஷமளிக்கும் ஒரே வழி ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமியின் நாமம் மட்டுமே! என உயிர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வு இல்லை என்ற கருப்பொருளில் பௌளி இராக திஸ்ரஆதியில் அன்னமாச்சாரியாரின் துள்ளல் இசையிலமைந்த கீர்த்தனைக்கு உடல்நிலையில் அழகு காட்டும் தமது நடனப்பள்ளிக்கே உரித்தான பாணியில் அமைந்த ராஜதர்ஷினியின் துடிப்பான நடனம் சபையோரை மேலும் பரவசமூட்டியது.

இறுதியாக தாளலயக் கோர்வைகளுடன் புள்ளிமயில் வாகனமேறும் அழகன் முருகனின் பாதம்பணிந்து வணங்குவதாக அமைந்த லால்குடி திரு.ஜெயராமன் அவர்களின் திலங்க் இராக ஆதி தாளத் தில்லானாவுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது. நாட்டியத்தில் அரிதாகப் பயன்படுத்தப்படும் இந்த ஒவ்வொரு உருப்படிகளும், ஆடுவதற்கு முன்னதாக அப்பள்ளி மாணவர்களினாலேயே அவ் உருப்படி பற்றிய அறிமுகம் கூறப்பட்டது. இவ் ஏற்பாடானது நாட்டியத்தில் ஆசிரியர் கூறவந்த விடயத்தை சபையோர் எளிதாக புரிந்து கொள்ளக் கூடியதாக அமைந்தது.

டாக்டர் திருமதி. ஷீலா உன்னிகிருஷ்ணன் அவர்களின் நடனஅமைப்பும் நட்டுவாங்கமும் ஆடலை சிறப்புற வழிநடத்த, திரு. ஸ்ரீகாந்த் கோபாலக்ருஷ்ணனின் வாய்ப்பாட்டும், திரு. குருபரத்வாஜ் அவர்களின் மிருதங்கமும், திரு.அனந்தக்ருஷ்ணன் அவர்களின் வயலின் இசையும் நிகழ்வை மேலும் மெருகூட்டின. முழுவதும் துள்ளல் இசையுடன் விறுவிறுப்பாக அமைந்த உருப்படிகளின் இடையில் பதம் போன்ற ஆழமுடைய அபிநய உருப்படியும் இணைக்கப்பட்டிருந்தால் இவ் அவைக்காற்றுகை நிகழ்வு மேலும் சிறப்பாக அமைந்திருக்கும்.





# The varnam stood apart




'Velanai Kaanbom', the varnam presented by Shivanee Kumar in her Bharatanatyam recital was well done by the young dancer. Her depiction reflected sincerity and her own innocent understanding of piece. Striking jathis by Sri. K. Balaji was the take away from the recital. What was even more interesting was how the dancer confidently executed the jathis in various patterns. Tisragati being an audience' favourite made everyone sit upright and clap their hands to match the beats.

'Asai Mugan', composition of Mahakavi Bharatiyaar was movingly depicted by the dancer. Her advantage being her amazing stage presence and interest to involve herself in the understanding of the piece.

Her other renditions including the Shiva Shankari Keerthanam and the Thillana were good numbers knitted in the recital that created a wholesome 75-minute recital. But a little bit of attention to her lines and precision of movements would make her evolve as a promising dancer.

Disciple of Smt. Maalini Balaji, Director, Udikshana Sangeetha Vidyalaya, Shivanee has been performing in sabhas across Chennai for the past five years. Nandini Arvind rendered the vocal support. Other members of the orchestra were Gajendra Ganesan (mridangam), C K Vijayraghavan (violin) and her teacher who hand held the performance along with doing the nattuvangam. Another disciple Madhumita Sridharan, also assisted the teacher in the nattuvangam.

SANGEETH SARATHY
Bharat Nritya Utsav
email: sangeethsarathy@gmail.com

**EDITORIAL TEAM**

Editor-in-chief:
Jagyaseni Chatterjee

Sub-editor (Tamil) : Sriram

Reporters:
Amrutha Sriram | Lalitha Narasimhan
Lajantha

**Photos:** Lingan Studios Shankar

**Layout & Design:** Fairy M

## Coming up

| | | |
|---|---|---|
| **10-2-2020 (Monday)** | | |
| 5.30 pm | Bharatanatyam | Sanjana |
| 7.00 pm | Bharatanatyam | P.V. Saptharishi and P.V. Meenakshi |
| **11-2-2020 (Tuesday)** | | |
| 5.30 pm | Bharatanatyam | S. Subashree |
| 7.00 pm | Bharatanatyam | V. Avanthika |
| **12-2-2020 (Wednesday)** | | |
| 5.30 pm | Bharatanatyam | Bhavana Balaji |
| 7.00 pm | Kathak | Akshatha M. Amin |
| **13-2-2020 (Thursday)** | | |
| 5.30 pm | Bharatanatyam | S.P.Rakshana Shri |
| 7.00 pm | Bharatanatyam | Anagha Ganesh and Simrita Iyer |
| **14-2-2020 (Friday)** | | |
| 5.30 pm | Bharatanatyam | Kshirja Govind |
| 7.00 pm | Bharatanatyam | Ramya Ramakrishnan |
| **15-2-2020 (Saturday)** | | |
| 4.00 pm | Bharatanatyam | Samiksha |
| 5.30 pm | Bharatanatyam | Students of Kaladiksha |
| 7.00 pm | Bharatanatyam | Dhivya Srilakshmi |
| **16-2-2020 (Sunday)** | | |
| 4.00 pm | Bharatanatyam | Hemavarshini |
| 5.30 pm | Bharatanatyam | Sushmita Sivakumar |
| 7.00 pm | Bharatanatyam | Aparna Krishnamurthy |

The newsletter is available online in our site
www.parthasarathyswamisabha.com.
If you wish to write for us send us an email at sangeethsarathy@gmail.com.